1978 மார்ச் 1]

திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மன்னித்துக் கொள்ளுங்கள். குடிசை மாற்று வாரியத்திற்கு என்று விதி முறைகள் வகுத்து இருக்கிறோம். வீடுகள் கட்டியதை எப்படி ஒதுக்குவது என்பதற்கும் விதிமுறைகள் இருக்கின்றனவா? அவைகள் அமைச்சரிடத்தில் இருக்கும். எந்தச் சட்டத்திலும் அப்படிப்பட்ட விதிமுறைகள் இருப்பதாக எனக்கு நினைவு இல்லை. அந்தச் சட்டவிதிகளை இந்த அவைக்குத் தெரிவித்தால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, ப. உ. ச. அவர்கள் பரிந்துரையின் மீது கொடுக்கப்பட்டிருப்பது 'நான்-எலிஜிபிலிட்டி', அதாவது கொடுப்பதற்குத் தகுதி இல்லாத ஒருவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது என்னுடைய ஸ்டேட்மெண்ட். வேண்டுமானால், தவறு எப்படி நடந்தது என்று உறுப்பினர் அவர்கள் கேட்டால் அதற்கு விளக்கம் தரத் தயார். எனக்குக் கிடைத்திருக்கிற தகவல்படி சுற்றுலா மாளிகையில் இருக்கக்கூடிய துப்புரவாளருக்கு அவர் பரிந்துரை செய்திருக்கிறார், அந்தப் பரிந்துரையின் மீது வீடு கொடுக்கப் பட்டிருக்கிறது.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இங்கே அளிக்கப் பட்ட பதில் ப. உ. ச. பற்றியது. அதற்கு ப. உ. ச. விளக்கம் கேட்டார். நான் தங்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்புவது, பதில் அளிக்கிற அமைச்சர்கள் அல்லது கேள்வி கேட்கிற உறுப்பினர்கள், ஒருவர் மீது குற்றஞ்சாட்டுவதாகப் பதில் அளிப்பதையோ அல்லது கேள்வி கேட்பதையோ தாங்கள் அனுமதிக்கிறீர்களா என்பது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கூடியவரை அப்படிப் பதில் சொல்லாமல் இருப்பது நல்லது, அப்படி ஏதாவது இருந்தால் அமைச்சரவர்கள் முன் எச்சரிக்கையாக முதலில் என்னிடம் சொல்லியிருக்க வேண்டும். கேள்விக்கு அப்பாற்பட்ட விவகாரங்களைப் பற்றிக் கூறுவது தவறு என்பது என்னுடைய கருத்து. கேள்விக்கேற்ற பதிலை அமைச்சர்கள் சொல்ல வேண்டுமென்றும், இப்படிப்பட்ட பிரச்சனை எழ இடமளிக்கக் கூடாது என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மேல்விஷாரம், கீழ்விஷாரம் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கல்.

*335வின.—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்— கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடாற்காடு மாவட்டம், மேல்விஷாரம், கீழ்விஷாரம் ஆகிய ஊர்களுக்கு பாலாற்றில் இருந்து குடிநீர் சப்ளை செய்ய அரசாங்கத்திடம் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

(அ) இல்லை.

(ஆ) எழ இடமில்லை.

திரு. துரை முருகன். : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இல்லை என்று பதில் சொன்னார்கள். ஏற்கனவே இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதா ? ஆம் எனில் எந்த ஆண்டில் நிறைவேற்றப்பட்டது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, கேள்வி வடாற்காடு மாவட்டம், மேல் விஷாரம், கீழ் விஷாரம் ஆகிய ஊர்களுக்குப் பாலாற்றிலிருந்து குடிநீர் சப்ளை செய்யத் திட்டம் உள்ளதா என்பது. அதற்கு இல்லை என்று சொன்னேன்.

திரு, துரை முருகன் : திட்டம் இப்போது இல்லையா அல்லது ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுவிட்டதா? திட்டம் இல்லை என்றால் இல்லை என்று சொல்ல வேண்டும் ; நிறைவேற்றப்பட்டு விட்டதானால் திட்டம் நிறைவேற்றப்பட்டு விட்டது என்று சொல்ல வேண்டும். இப்போது இருக்கிறதா இல்லையா என்பதை மட்டும் பார்க்கக் கூடாது. அது ஏற்கனவே போட்ட ஸ்கீம். அந்த ஸ்கீம் நிறைவேற்றப்பட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ; நியாயமாக இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டுமென்றுதான் சொல்ல வேண்டும். இருந்தாலும் 1974 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ம் தேதியிலிருந்து ஒரு திட்டம் அமுலில் இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை என்று அமைச்சரவர்கள் சொன்ன பிறகு தனிக் கேள்விதான் போட வேண்டும்.

திரு. துரை முருகன்: மன்னிக்க வேண்டும். ஒரு ஊருக்குக் குடி தண்ணீர் சப்ளை செய்யும் திட்டம் இது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை என்று சொன்ன பிறகு மாற்றுக் கேள்விதான் போட வேண்டும். நீங்கள் உட்காருங்கள்.

திரு. துரை முருகன் : நான் கேட்கவில்லை. ஆனால், இது நியாயமா ? இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்று சொல்வதற்கு அமைச்சர் ஏன் வெட்கப்படுகிறார் ? முந்தைய ஆட்சியிலே நிறைவேறி விட்டதென்று சொல்வதற்கு வெட்கமா ?

The Hon. Thiru S. RAGHAVANANDAM; Mr. Speaker, Sir, I am only supposed to give answers to the question raised by Hon. Members.